பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**21 09 2026 MONDAY 12.40 PM**

ஆகாஷ்வாணி

## தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளர்ச்சிப்பாதையில் சூரிய மின்சக்திக்கழகம் முக்கிய பங்காற்றி வருவதாக மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

2. மருந்துப்பொருட்கள் கண்காணிப்பு கட்டமைப்பு நாட்டில் வலுவாக உள்ளது என்று சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் கூறியுள்ளார்.

3. கனடாவில் விமான பயிற்சியின்போது ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்த தமிழகம் மற்றும் புதுச்சேரியை சேர்ந்த இரண்டு மாணவர்களின் உடல்களை இந்தியா கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும் என்று அங்குள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

4. சூடான் நாட்டின் கனிம சுரங்கத்தில் சுவர் இடிந்த விபத்தில் 10 தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளனர்.

5. ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<<>>>>>

சூரிய மின்சக்தி கழகத்தின் **15-**ஆம் ஆண்டு நிறுவன நாள் இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், நாட்டின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளர்ச்சிப்பாதையில் சூரிய மின்சக்திக்கழகம் முக்கிய பங்காற்றி வருவதாக தெரிவித்துள்ளார்.

கடநத் **15** ஆண்டுகளாக தூய எரிசக்தி கட்டமைப்பை உருவாக்குவதற்கு இந்த கழகம் சிறப்பான பங்களிப்பை செய்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>

இந்தியாவில் மருந்துப் பொருட்களின் தரம் மற்றும் பக்கவிளைவுகள் குறித்த ஆய்வு கட்டமைப்பு வலுவாக உள்ளது என்று சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரிய பட்டேல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று மருந்துப் பொருட்கள் செய்முறை கையேட்டை வெளியிட்டு பேசிய அவர், நாடு முழுவதும் ஆயிரத்து **100-**க்கும் மேற்பட்ட மருந்துப் பொருட்கள் ஆய்வு மற்றும் கண்காணிப்பு மையங்கள் செயல்பட்டு வருவதாக கூறினார்.

ஆரம்ப சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையில் மேலும் சில ஆய்வு மையங்களை நிறுவ அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

உலக சுகாதார அமைப்பின் அறிவுறுத்தலின்படி இந்த மருந்து கட்டுப்பாட்டு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் திருமதி அனுப்பிரிய பட்டேல் குறிப்பிட்டார்.

<<<<<<<>>>>>>

கனடாவில் விமான பயிற்சியின்போது ஏற்பட்ட விபத்தில் தமிழகம் மற்றும் புதுச்சேரியை சேர்ந்த இரண்டு மாணவர்கள் உயிரிழந்த சம்பவத்திற்கு கனடாவின் **Vancouver**-ல் உள்ள இந்திய தூதர் தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்த விபத்தில் உயிரிழந்த மனோஜ் சிவகுமார், ஸ்ரீசரண் திருஞானசம்பந்தம் ஆகிய இருவரின் உடல்களையும் இந்தியா அனுப்பி வைப்பதற்கு தேவையான உதவிகள் செய்துதரப்படும் என்று கூறியுள்ளார்.

இந்த விமானப் பயிற்சி மாணவர்களை இழந்த அவர்களின் குடும்பத்தினருக்கும், நெருங்கிய உறவினர்களுக்கும் ஆறுதல் தெரிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>>

குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு 3 நாள் பயணமாக இன்று குஜராத் மாநிலம் செல்கிறார்.

நாளை கெவாடியாவில் ஏக்தா நகரில் நடைபெற உள்ள 72-வது தேசிய திரைப்பட விருது வழங்கும் நிகழ்ச்சியில் அவர் பங்கேற்று சிறந்த திரைக்கலைஞர்களுக்கு விருதுகளை வழங்க உள்ளார்.

வதோதராவில் உள்ள மகாராஜா சாயாஜி ராவ் பல்கலைக்கழகத்தின் 75-வது ஆண்டு பட்டமளிப்பு விழாவிலும் அவர் பங்கேற்று உரையாற்ற உள்ளார்.

உலகம் புத்துயிர் பெறுவதற்கு ஆன்மீக விழிப்புணர்வு என்ற பிரம்மாகுமாரிகள் இயக்கத்தின் பிராச்சாரத்தையும் குடியரசுத் தலைவர் தொடங்கி வைக்க உள்ளார்.

<<<<<<<>>>>>

கேரளத்தில் நடைபெற்ற 18-ஆவது சர்வதேச ஆவண மற்றும் குறும்பட விழாவில் எந்தவொரு படத்தையும் திரையிடுவதற்கு அனுமதி மறுக்கப்படவில்லை என்று தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் கூறியுள்ளது.

இதுதொடர்பாக, காங்கிரஸ் மூத்த தலைவர் திரு சசி தரூரின் குற்றச்சாட்டுக்கு பதிலளித்துள்ள அமைச்சகம், ஆறு படங்களுக்கு

மட்டும் விரிவான தகவல்களுடன் கருத்துருவை சமர்ப்பிக்கும்படி கோரப்பட்டிருந்ததாகவும் தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதற்கான பயணத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி, தலைமையிலான அரசு முனைப்புடன் மேற்கொண்டு வருகிறது.

திரு நரேந்திர மோடியின் 25 ஆண்டுகால அரசியல் பயணம் மக்கள் சேவையே - தேசத்தின் சேவை என்ற உறுதிப்பாட்டோடு நடைபெற்று வருகிறது.

உள்ளார்ந்த வளர்ச்சியும், சமூகத்திற்கான அதிகாரமும் வழங்கப்பட வேண்டும் என்பதிலும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்பதிலும் மத்திய அரசு செயல்பட்டு வருகிறது.

சேவா சங்கல்ப் தொடரில் இன்று இடம்பெறுகிறது பிரதமரின் தொலைநோக்கு பார்வைக்கு செயல்வடிவம் கொடுத்த அயோத்தி ஸ்ரீராமர் கோவில் குறித்த தொகுப்பு.

***(Sound Byte — எல் கே - 90 Sec.*** **)**

<<<<<<<>>>>>

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு பெருவிழா நிறைவு பெற்றுள்ள நிலையில், பக்தர்கள் வருகையும் அதிகரித்துள்ளது.

இதனையொட்டி, கட்டணமில்லா தரிசனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது.

இந்த அனுமதி நாளை மறுநாள் வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக கோயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது என்று எமது செய்தியாளர் கூறுகிறார்.

***(Voice Byte — ரகுராஜா - 35 Sec. )***

<<<<<<<>>>>>

சூடான் நாட்டின் கனிம சுரங்கத்தில் சுவர் இடிந்த விபத்தில் 10 தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளனர். 21 பேர் காயமடைந்தனர்.

இந்நாட்டின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள செங்கடல் மாகாணத்தில் இந்த கனிமச்சுரங்கம் அமைந்துள்ளது.

சூடான் நாட்டின் கனிமவள நிறுவனம் இதுகுறித்து வெளியிட்டுள்ள செய்தியில், சுரங்கத்தின் ஐந்து பகுதிகளில் தொடர்ச்சியாக சுவர் இடிந்து விபத்து நேரிட்டதாக தெரிவித்துள்ளது.

பாறைகளும், மண்ணும் அதிக அளவில் மூடியிருப்பதால், மீட்புப் பணிகள் பாதிப்படைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் காணாமல் போன தொழிலாளர்கள் எத்தனை பேர் என்ற விவரமும் முழுமையாக பெற முடியவில்லை என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>

ஜப்பானின் கிழக்கு பசிபிக் கடற்கரைப்பகுதியில் கடும் சூறாவளி மற்றும் கனமழை பெய்யக்கூடும் என்று அந்நாட்டு வானிலை ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த கனமழையால் நிலச்சரிவுகளும் ஏற்படக்கூடும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**Hachijo** தீவுக்கு மேற்கு தென்கிழக்கே **100** கிலோமீட்டர் தொலைவில் இந்த கடும் சூறாவளி மையம் கொண்டுள்ளது.

**Boso** தீபகற்பத்தையொட்டி இன்று மாலை கரையை கடக்கக் கூடும் என்று ஜப்பான் வானிலை ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றுள்ளது.

ஆடவருக்கான **10** மீட்டர் ஏர் ரைஃபில் குழு பிரிவில் இந்தியா வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளது.

இப்போட்டியில் **Himanshu Dhillon, Rudarnkksh Patil, Parth Rakesh Mane** ஆகியோர் சிறப்பாக விளையாடி இப்பதக்கத்தை கைப்பற்றினர்.

கலப்பு தற்காப்புக்கலை மகளிர் **60** கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் **Suchika Tariyal** வெண்கலப்பதக்கம் வென்றுள்ளார்.

ஆசிய விளையாட்டுப் போட்டியில் பதக்கம் வென்ற வீரர்களுக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் தலைவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், பதக்கம் வென்ற வீரர்கள் கவனமுடன் சிறப்பாக செயல்பட்டு நாட்டிற்கு பெருமை தேடித் தந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், கலப்பு தற்காப்புக்கலை மகளிர் **60** கிலோ எடைப்பிரிவில் வெண்கலப்பதக்கம் வென்ற **Suchika Tariyal** -க்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கலப்பு தற்காப்புக்கலை பிரிவில் இந்தியா பெறும் முதல் பதக்கமான இது வரலாற்று சிறப்புமிக்கது என்று குறிப்பிட்டுள்ளார்.

**<<<<<<<<END>>>>>>**